

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 327 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 24 – புதன்கிழமை 08 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 327 : Thiruvalluvar Year - 2057 - Aani 24 - Wednesday 08 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


### தீண்டாமை ஒழிப்புக்காகப் போராடிய போராளி

## இரட்டைமலை சீனிவாசன் பிறந்தநாள்!

### "இலண்டனில் இருந்து என் வணக்கத்தைச் செலுத்துகிறேன்" – கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**லண்டன், ஜூலை 8-**

**தீண்டாமை ஒழிப்புக்காகப் போராடிய போராளி இரட்டை மலை சீனிவாசன் பிறந்த நாளில், வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப் பட்ட மக்களுக்காக அவர் ஓங்கி ஒலித்த இலண்டனில் இருந்து என் வணக்கத்தைச் செலுத்துகி றேன் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரி வித்துள்ளார்.**

இது குறித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் விடுத் துள்ள வாழ்த்துச் செய்தி வரு மாறு:-



ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் உரிமைகளுக்காக 'திராவிடமணி' இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் வட்ட மேசை மாநாட்டில் ஓங்கி ஒலித்த இலண்டனில் இருந்து அவரது பிறந்தநாளில் என் வணக்கத்தைச் செலுத்துகி றேன்.

நம் மண்ணில் தீண்டத் தகாதவர்களென ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை உணர்த் துவதற்காக ஐந்தாம் ஜார்ஜ் மன் னருடன் கைகுலுக்க மறுத்த அவரது துணிச்சலை நினைத் துப் பெருமிதம் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்காகப் போராடிய போராளியான தாத்தா இரட்டைமலையாரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட ஓட்டேரி மயானபூமி அமைந் துள்ள பிரிக்ளின் சாலைக்கு "இரட்டைமலை சீனிவாசன் சாலை" என #DravidianModel ஆட்சியில் பெயர் சூட்டித் திறந்து வைத்ததையும் பெருமை யோடு இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரி வித்துள்ளார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினால் தொடங்கப்பட்ட

## மகளிர் உரிமைத்தொகை திட்டம் மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சி!

### பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தகவல்!

**புதுடெல்லி, ஜூலை 8 -**

**மகளிர் உரிமைத்தொகை திட் டம் மூலம் சமூகத்தில் மிகப்பெரிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள் ளதாக பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தெரிவித்துள் ளது. செலவுகள் குறைந்து, பொருளாதார வளர்ச்சி அதிகரித் துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில், அப்போதைய முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் கள் தொடங்கிய கலைஞர் மக ளிர் உரிமைத்தொகை திட்டம் பல்வேறு மாநில அரசுகளாலும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.



2026 நிதியாண்டில் இது வரை 15க்கும் மேற்பட்ட மாநி லங்கள், பெண்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகச் செலுத்தப்படும் மாதாந்திர அல் லது வருடாந்திரப் பணப் பரிமாற் றத் திட்டங்களை அறிமுகப்படுத் தியுள்ளன. இவற்றின் மொத்தச் செலவு ஆண்டுக்கு 1.7 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட் டுள்ளது. 12 கோடிப் பெண் பய னாளிகளின் வங்கி கணக்கில் இவை சென்றடைகின்றன.

இந்த திட்டம் தொடர்பாக பிர தமரின் பொருளாதார ஆலோச னைக்குழு ஆய்வு நடத்தியது.

அதில் மகளிர் உரிமைத் தொகை மூலம் சமூகத்தில் மிகப் பெரிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. குடும்ப உறுப்பினர்க ளின் நிதி நிலையை மேம்படுத் துவதோடு, அவர்களின் செலவுகளை குறைப்ப தாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் நல்ல வளர்ச்சி இருப்பதால், இந்த திட்டத்தில் மாற்றம் அவசி யம் என்றும் பிரதமரின் பொரு ளாதார ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது.

### கரூர் கொடுந்துயரச் சம்பவம்: அமைச்சர்

## ஆதவ் அர்ஜூனாவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு!

### உச்சநீதிமன்றம் அனுமதி!

**புதுடெல்லி, ஜூலை 8 -**

**கரூர் கொடுந்துயர சம்பவத் தில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வுக்கு எதிராக நீதிமன்ற அவ மதிப்பு வழக்கு தொடர உச்சநீதி மன்றம் அனுமதி அளித்துள்ளது.**

கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27ல் விஜய் பிரச்சா ரத்தின்போது கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியாகினர். நாட்டையே உலுக்கிய இச்சம் பவத்தில் உச்சநீதிமன்ற உத்த ரவின்படி ஓய்வுபெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி கண்காணிப்பில் சி.பி.ஐ. விசா ரணை நடத்தி வருகிறது. தங் கள் மீதான குற்றத்தை மடை மாற்றம் செய்ய பொதுவெளியில் அரசியல் எதி ரிகளை அச்சுறுத்தும் வகை யில் ஆதவ் அர்ஜூனா உள் ளிட்டோர் பேசி வருகின்றனர்.

இதனிடையே கரூர் வழக்கு குறித்து ஜோசப் விஜய், ஆதவ் அர்ஜூனா, புஸ்சி ஆனந்த், நிர்மல் குமார் உள் ளிட்ட இந்த வழக்கில் தொடர்பு டையவர்கள் பொதுவெளியில் பேச தடை விதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் கடந்த வாரம் மனு தாக்கல் செய்யப் பட்டது. பொதுவெளியில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கருத்துக்களை தெரிவித்து வரு வது விசாரணையை சீர்கு



லைக்கச் செய்யும் என்றும், ஆதவ் அர்ஜூனாவின் பேச்சு, சாட்சிகள் மிரட்டப்படுவதுடன், விசாரணையை தவறாக வழி நடத்த வாய்ப்புள்ளதாகவும் தி.மு.க. மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி கே. வி.விஸ்வநாதன் தலைமையி லான அமர்வில் அவசர வழக் காக நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது, கரூர் கொடுந்துயர வழக்கில் ஆதவ் அர்ஜூனா வின் பேச்சு குறித்து நீதியரசர் அஜய் ரஸ்தோகி குழுவை அணுகி புகார் மனு அளிக்கு மாறு உச்சநீதிமன்றம் ஆலோ சனை வழங்கியது. மேலும், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வுக்கு எதிராக நீதிமன்ற அவம திப்பு வழக்கு தொடரவும் உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

**மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேட்டி!**

இதனிடையே, உச்சநீதி மன்றம் வழங்கிய ஆலோச னையின்படி, அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என மூத்த வழக் கறிஞரும், தி.மு.க. நாடாளு மன்ற உறுப்பினருமான வில் சன் தெரிவித்துள்ளார். டெல்லியில் செய்தியாளர்களி டம் பேசிய அவர், உச்சநீதிமன் றம் வழங்கிய ஆலோசனை யின்படியே மனு வாபஸ் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவித் தார்.

### வாக்குறுதிகளை நிறைவேற்றாத

## த.வெ.க. அரசுக்கு விவசாயிகள் கண்டனம்!

### சென்னையில் பேரணி – ஆர்ப்பாட்டம்!

*சென்னை, ஜூலை 8-*

*கூட்டுறவு பயிர் கடன் களை தள்ளுபடி செய்வ தில் மோசடி செய்த த.வெ.க. அரசை கண் டித்து சென்னையில் ஆயி ரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பேரணி மற் றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*தேர்தல் வாக்குறுதி யின்படி விவசாயிகளின் பயிர்க்கடன்களை விஜய் அரசு தள்ளுபடி செய்ய வில்லை. மோசடி செய்த த.வெ.க. அரசுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின் றனர். அந்த வகையில் சென்னையில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*புதுப்பேட்டையில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்ட விவசா யிகள் ஆயிரக்கணக்கா னோர் த.வெ.க. அரசுக்கு எதிராக கண்டனத்தை தெரிவித்தனர்.*

*த.வெ.க. ஆட்சியில் வாக்குறுதிகள் நிறைவேற் றவில்லை விவசாயிகளை நம்ப வைத்து விஜய் ஏமாற்றி விட்டார் பின் னர் செய்தியாளர்களிடம் பேசிய விவசாயிகள் பாது காப்பு சங்கத்தின் நிறுவ னர் ஈசன் முருகசாமி, வாக்குறுதி அளித்து விவ சாயிகளை விஜய் ஏமாற்றி விட்டதாக குற்றம் சாட்டி னார். வாக்குறுதிகளை நிறைவேற்றா விட்டால், தற்கொலை செய்துகொள் வதை தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என் றும் விவசாயிகள் விரக்தியுடன் தெரிவித்த னர்.*

## வயநாட்டில் நிலச்சரிவு!

வயநாடு, ஜூலை 8 –

கேரள மாநிலம் வயநாடு கள் ளாடி சுரங்கப்பாதை கட்டுமானப் பகுதியில் பெய்து வரும் கன மழை காரணமாகப் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. சுரங்கப் பாதை பணிகள் நடந்து கொண் டிருந்தபோது மலையின் ஒரு பகுதி திடீரென சரிந்து விழுந்த தில், சேற்றில் புதையுண்ட ஒரு தொழிலாளி உட்பட 6 பேர் மீட்கப் பட்டு மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அருகில் உள்ள எஸ் டேட் பகுதியில் சிலர் நிலச்சரிவில் சிக்கியிருப்பதாக உள்ளூர் மக் கள் தெரிவித்துள்ளனர். அங் குள்ள தற்காலிக பேருந்து நிறுத் தமும் மண்ணில் புதைந்துள்ளது. மேலும் பாலம் ஒன்று இடியும் நிலையில் உள்ளதால், ஆபத் தான பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

### ரீல்ஸ் மோகத்தில்

## அரசுப் பள்ளியில் அமைச்சர் கீர்த்தனா ஆய்வு!

### தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

*சென்னை, ஜூலை 8-*

*ரீல்ஸ் மோகத்தில் அரசுப் பள்ளியில் ஆய்வு என்ற பெயரில் மாணவ, மாணவியரின் தன்னம்பிக்கையை கேலி செய்த அமைச்சர் கீர்த்தனாவின் செய லுக்கு தி.மு.க. கண்ட னம் தெரிவித்துள்ளது.*

*தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அர சுப்பள்ளி மாணவியின் தன்னம்பிக்கையைத் தனது விளம்பர ரீல்ஸ்க் காக கேமரா முன்பு கேலி செய்து சங்கடப்ப டுத்திய அமைச்சர் கீர்த் தனாவின் செயலை வன்மையாக கண்டித் துள்ளது.*

*சொந்த அனுபவங் களை மறந்த அமைச்ச ரின் இந்த அதிகாரம் மிக்க மேட்டிமைத்த னம், த.வெ.க.வின் விளம்பர வெறிக்காக எவரையும் பலி குடுக்க தயங்க மாட்டோம் என்ற சிந்தனையை அப் பட்டமாகக் காட்டுகி றது என தி.மு.க. ஐ.டி. விங் சாடியுள்ளது.*

*தேர்தலுக்கு முன்பும் சரி, தற்போதும் சரி, தங் கள் விளம்பர வெறிக் காகப் பிஞ்சு குழந்தை களைப் பயன்படுத்தும் இத்தகைய பொறுப் பற்ற செயலைத் த.வெ .க.வும் அதன் தலைவ ரும் கைவிட வேண்டும் என்றும், பதவி உயர்ந் தால் மட்டும் போதாது; த.வெ.க. தலைவருக் கும் அவருடன் இருப்ப வர்களுக்கும் மனமும் உயர்ந்திருக்க வேண் டும் என்றும் தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம் தெரிவித்துள்ளது.*

**நெட்டிசன்கள் கண்டனம்!**

*மேலும் தனது ஆங்கி லப் புலமையைக் காட்ட, பள்ளி மாண வர்களின் தன்னம்பிக் கையை உடைக்கும் வகையில் செயல்பட்ட அமைச்சர் கீர்த்தனா வுக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன.*

*அமைச்சர் கீர்த்தனா நேர்காணலின் போது ஆங்கிலத்தில் பிழை யோடு பேசிய வீடி யோவை சுட்டிக் காட்டி, நெட்டிசன்கள் ஆங்கிலப்பாடம் எடுத்த வீடியோ சமூக வலைதளங்களில் வைர லாகி வருகிறது.*

## பெரம்பூர், திருச்சி தொகுதிகளின் தேர்தல் வழக்குகள்!

### முதல்வர் விஜய்க்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ்!

சென்னை, ஜூலை 8 -

சென்னை பெரம்பூர் தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.சேகர் மற் றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் இனிகோ இருதய ராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்தி ருந்தார். இந்த நான்கு வழக்குகளும் நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் நேற்று விசாரணைக்கு வந்தன.

இதேபோல, வில்லிவாக்கம் தொகுதியில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் கார்த்திக் மோகன் மற்றும் சிவராஜ் ஆகியோர் தாக்கல் செய்திருந்த தேர்தல் வழக்குகளும், விசாரணைக்கு வந்தன.

இதனை விசாரித்த நீதிமன்றம், திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் தொகுதி தொடர்பான தேர்தல் வழக்கு களில் முதல்வர் விஜய், இந்திய தேர் தல் ஆணையம் ஆகியோர் 3 வாரங் களில் பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேபோல் அமைச்சர் ஆதவ் அர் ஜூனாவும் பதிலளிக்குமாறு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.